ஆணைக் குழு அவர்களை எடுத்துக் கொள்வதாக இருந்தால் அதற்காக விதிவிலக்குத் தர ஆயத்தமாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்தோம். 28-7-1973-ல் மறுபடியும் போதுமான ஆசிரியர்கள் இல்லாததன் காரணமாக விழுக்காடு குறைந்திருந்தால் கூட அவர்களைத் தேர்வு ஆணைக்குழு எடுத்துக் கொள்வதாக இருந்தால் அவர்களுக்கு விதியைத் தளர்த்த ஆயத்தமாக இருக்கிறோம் என்று தெரிவித்தோம். இப்போது தாற்காலிகமாக இருக்கிற 165 பேர்களிலே 69 பேர்களை நாம் நீக்கி இருக்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்கள் தொடர்ந்து பணிபுரிகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக பணிபுரிந்தவர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள். தகுதிபெற்றவர்கள் இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : மார்க் அதிகமாக வாங்கியதாலேயே அவர்கள் எல்லாம் மாணவர்களுக்கு நல்லமுறையிலே பாடம் சொல்லிக் கொடுப்பார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடமுடியாது. சில பேர்கள் ஏதோ எழுதி மார்க்குகளைப் பெற்றுவிடுவார்கள், அவர்களால் திறமையாகப் போதிக்க முடியாது, அதைக் கருத்தில் கொண்டு 50 விழுக்காடு என்ற நிலையை நீக்கிவிட அரசு முன் வருமா? அதோடு கூட வேலையில் ஏற்கனவே அமர்த்தப்பட்டவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஒருவருடைய தகுதியை, திறமையை, எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துத்தான் கணக்கிடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்று குறைவாக எண்கள் வாங்கியவர்கள் எல்லாம் பயிற்றுவிப்பதில் கெட்டிக்காரர்கள் என்று எப்படி முடிவுக்கு வர முடியும்? அதே போல் ஏ வாங்கியவர்கள் எல்லாம் கெட்டிக்காரர்கள் இல்லையென்ற முடிவுக்கு எப்படி வந்துவிட முடியும்? இப்போது எண்ணிக்கை அடிப்படையிலேதான் முடிவு செய்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்கள்—தாற்காலிகமாகப் பணியாற்றுகிறவர்கள் பாதிக்கப்படவில்லை. இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாகப் பணியாற்றியவர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள், 165 பேர்களில் 69 பேர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள், மற்றவர்கள் இருந்துவருகிறார்கள்.

Ananvilai Primary School

*722 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

Whether there are proposal under the consideration of the Government to upgrade the 'Ananvilai' Primary School in the Usarathuvilai Village Panchayat in Karungal Range, Kanyakumari district?

1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அங்குள்ள பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 500-க்கு அதிகமாக இருக்கிறது. பக்கத்தில் அரசுப் பள்ளிகளும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதை நடுத்தரப் பள்ளியாக உயர்த்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது பற்றிய செயற்குறிப்பு பள்ளிக் கல்வி இயக்குநரிடத்திலோ அரசினிடத்திலோ வரவில்லை. முறைப்படி விண்ணப்பம் செய்து நிபந்தனைகளை நிறைவேற்றக்கூடிய நிலைமை இருந்தால் அரசு ஆராயும்.

சிற்பக்கலை பயின்றோர்க்கு வேலைவாய்ப்பு

*723 வினா :— திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் பயின்று முடித்த சிற்பக்கலை மாணவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் சிறப்புத்திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, பல்லவன் காலத்திலிருந்து இராஜேந்திர சோழன் காலம் வரையில் உயிர் ஓவியமாகத் திகழ்ந்த சிற்பக் கலை இடைக்காலத்திலே உயிர் இழந்து கலைஞர் அவர்கள் ஆட்சியில் மீண்டும் புத்துயிர் பெற்று இருக்கிறது. எதிர்காலத்திலே அது ஜீவன் இழக்காமல் இருக்க அதைக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பாடமாக வைக்க வேண்டிய அவசியம் இல்லை. பயிற்சி பெறுகிறவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 95 மாணவர்கள் பயிற்சி பெற்று இதுவரையில் வெளிவந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மாநிலத்திலேயும் வேறு பல மாநிலங்களிலேயும் பணியாற்றி வருகிறார்கள். இப்போது திருவள்ளுவர் கோட்டம் பணியிலே பலபேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். டிகிரி ஆக்குவதன் மூலமாக அவர்கள் அந்தத் தொழிலை நடத்துவார்கள் என்று சொல்ல முடியாது, மேற்பார்வையாளராகவோ, கடிதம் எழுதுகிறவராகவோ வேறு